**FIRST INFORMATION REPORT** | TAMIL NADU POLICE
முதல் தகவல் அறிக்கை | INTEGRATED INVESTIGATION FORM-I
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066077

1. District : Coimbatore PS: V & AC Year: 2019 FIR No.: 12/2019/AC/CB Date: 29.05.19 14.30hrs
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention Of Corruption Act 1988 as amended by the Prevention Of Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்: 7(a) & 7(A)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 23.05.19 — Date to : நாள் வரை 29.05.2019
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 11.00hrs — Time to : நேரம் வரை 09.10hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.05.2019 — Time : நேரம் 13.30hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.05.2019 — Time : நேரம் 13.30hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Tamil Typed (Computer)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Coimbatore Corporation Office, Town Hall, Coimbatore about 6 Km South East
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : -
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : B.Somasundaram — (b) Father's/ Husband's Name : Balasingam
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 53/2019 — (d) Nationality : Indian — (e) Passport No. : -
நாள் / பிறந்த ஆண்டு — நாட்டினம் — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : - வழங்கப்பட்ட நாள் — Place of Issue : - வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Real Estate — (g) Address : முகவரி D.No.509/P3, 3rd Floor, Red Rose Plaza D.B. Road, R.S.Puram, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. Saravanan, Assistant Town Planning Officer, South Zone Coimbatore Corporation, Kuniyamuthur Coimbatore.
2) Tr. Anandkumar, (Private person)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— No Delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

29/5/2019

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
29.5.2019.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29.05.19, 16.00 hrs

Name: பெயர் M. Vijayalakshmi
Rank: நிலை Inspector No. எண் ... Police
VSAC, Coimbatore

கோயம்புத்தூர் ஊழல் தடுப்புமற்றும் கண்காணிப்புபிரிவுகுற்ற எண்.12/2019/ AC/CB u/s 7(a) & 7A of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் விபரம்

29.05.2019 ம் தேதி புதன்கிழமை மதியம் 13.30 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது கதவு எண்-509/P3, 3வது தளம், ரெட்ரோஸ் பிளாசா, D.B.ரோடு, R.S.புரம் கோவை என்ற முகவரியில் குடியிருந்து வரும் பாலசிங்கம் என்பவரது மகன் திரு.சோமசுந்தரம் என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார் சம்மந்தமாக ரகசிய விசாரணையும் மேற்கொண்டேன். அந்த புகாரின் அடிப்படையில் எதிரிகளின் நற்பெயர் குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரிகளின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகாரில் சொல்லப்பட்டதுபோல் புகார்தாரரிடம் ATPO திரு.சரவணன் வாதி சம்மந்தப்பட்ட நிலத்திற்கு அபிவிருத்தி வேலைகள் முடிக்கப்பட்டதற்கான கடிதம் வழங்க ஏற்பாடு செய்ய லஞ்சமாக பணம் கேட்டுவந்ததும் மற்றும் அவருக்கு உறுதுணையாக திரு.ஆனந்தகுமார் என்பவர் இருந்துவந்ததும் தெரிகிறது. மேலும் புகார்தாரரின் முன்நடத்தைமற்றும் புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசியவிசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. மேலும் புகார்தாரர் செல்போனில் பதிவு செய்திருந்த ஆடியோ பதிவுகளை புகார்தாரரின் முன்னிலையில் கேட்டு விபரம் தெரிந்து கொண்டேன். நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்தும் செல்போனில் இருந்த உரையாடல்களை கேட்டதில் இருந்தும் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 29.05.2019 ம் தேதி மதியம் 2.30 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2019/ AC/CB-ல் ஊழல் தடுப்பு சட்ட பிரிவுகள் 7(a) & 7A of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி எதிரிகள் 1.திரு.சரவணன், ATPO மற்றும் 2) திரு.ஆனந்தகுமார் (தனி நபர்) ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் B.சோமசுந்தரம் வயது 53, S/O, பாலசிங்கம் கதவு எண்-509/P3, 3வது தளம், ரெட்ரோஸ்

பிளாசா, D.B.ரோடு, R.S.புரம், கோவை. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள்,ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கோவை-30. அய்யா, நான் கோவை R.S புரத்தில் ரெட்ரோஸ் பிளாசா, D.B.ரோட்டில், Somus Properties என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறேன். நான் கடந்த 20 வருடமாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். திருமதி.சுகுணா க/பெ.முத்துகுமார், கதவு எண்-27, முத்தையா உடையார் வீதி, தெலுங்குபாளையம் குமாரபாளையம் கிராமம் கோவை என்பவருக்கும் அவருடைய மகள் திருமதி.சாந்தினி க/பெ.முரளிதரன் என்பவர்களுக்கு சொந்தமாக செல்வபுரம் குமாரபாளையம் கிராமத்தில் சர்வே எண்-259, 261, 262-ல் அமைந்துள்ள 4.76 ஏக்கர் நிலம் உள்ளது. திருமதி.சுகுணாவின் மகள் அமெரிக்காவில் வசித்து வருகிறார். திருமதி.சுகுணா அவர்கள் திட்ட அனுமதி கேட்டு உறுப்பினர் செயலர் அவர்களுக்கு கடந்த 2015-ம் ஆண்டு மனு கொடுத்துள்ளார்கள். மேற்படி நிலத்தை திருமதி.சுகுணா அவர்கள் எனக்கு ரூ.11,17,31,400/-க்கு கிரைய ஒப்பந்தம் கடந்த 11.07.2016-ம் தேதி இணை சார்பதிவாளர்-2, ராஜ வீதி அலுவலகத்தில் வைத்து பத்திர எண் 3549/16-ஆக பதிவு செய்து கொண்டோம். மேலும் அந்த நிலத்திற்கு உண்டான முன்பணத் தொகையாக ரூ.2 கோடி தொகையை காசோலையாக திருமதி.சுகுணா அவர்களுக்கு வழங்கினேன். மேற்படி நிலத்தை அபிவிருத்தி செய்து அந்த நிலத்திற்கு LPA அப்ரூவல் பெற்று லே அவுட் போட்டு அந்த நிலங்களை விற்று அதற்கு உண்டான தொகையை திருமதி.சுகுணா அவர்களுக்கு கொடுப்பதாக பேசி முடிவு செய்து ஒப்பந்தம் இருவரும் செய்து கொண்டோம். அதன் பின்பு அவரது நிலத்திற்கு உண்டான திட்ட அனுமதி பெறுவதற்கான வேலைகளை LPA அலுவலகம் சென்று நான் தான் கவனித்து வந்தேன். பின்னர் அந்த இடத்தில் தார்சாலை, மின் விளக்கு, பூங்கா, கழிவுநீர் வடிகால், மதில்சுவர், மற்றும் குடிநீர் குழாய் ஆகிய அபிவிருத்தி வேலைகள் அனைத்தும் LPA அலுவலகத்தில் கொடுத்த திட்ட அனுமதி வரைபடத்தில் உள்ளதுபோல் அனைத்து வேலைகளையும் செய்து முடித்தோம். மேலும் பூங்கா ரோடு ஆகியவற்றை திருமதி.சுகுணா அவர்கள் கோவை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு தான செட்டில்மென்ட் கடந்த 03.02.2017-ம் தேதி பத்திர எண் 405/2017 ஆக செய்து கொடுக்கப்பட்டது. அதன்பின்பு குனியமுத்தூரில் உள்ள கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் அலுவலகம் சென்று உதவி ஆணையர் அவர்களை கடந்த ஏப்ரல்-2019 மாதம் இரண்டாவது வாரத்தில் சந்தித்து திருமதி.சுகுணா பெயரில் ஆவணத்தின் அசல், வில்லங்க சான்று நகல், வட்டாசியரின் பட்டா மாறுதல் ஆணை ஆகியவற்றை ஒப்படைப்பு செய்ததற்கான விண்ணப்பம் கொடுத்தேன். அதற்கு அவர் மேற்படி

விண்ணப்பத்தை பெற்றுக் கொண்டு கோவை மாநகரட்சி தெற்கு மண்டல அலுவலகத்தில் உள்ள ATPO திரு.சரவணன் அவர்களை பாருங்கள் அவர் தான் உங்கள் file யை பார்க்கிறவர் என்று கூறினார். நான் அன்றைய தினமே ATPO சரவணன் என்பவரை குனியமுத்தூர் உள்ள அவரது அலுவலகத்தில் மாலை சுமார் 03.30 மணியளவில் சந்தித்தேன். அப்போது அவர் உங்கள் பைல்லை பார்த்துவிட்டு சொல்கிறேன் என்று கூறினார். அதன்பின்பு இரண்டு நாட்கள் கழித்து ATPO சரவணன் அவர்களை அவருடைய அலுவலகம் சென்று மீண்டும் பார்த்தேன். அப்போது அவர் எங்கள் சைட்டிற்கு வருவதாகவும், மேலும் உறுப்பினர் செயலருக்கு வரைபடம் கேட்டு கடிதம் எழுதியுள்ளதாகவும் என்னிடம் சொன்னார். நான் அவரிடம் அந்த வரைபடத்தை நானே நேரில் சென்று பெற்று வருவதாக சொல்லி வந்து விட்டேன். பின்னர் அவர் கேட்டிருந்த வரைபடத்தை LPA அலுவலகம் சென்று பெற்று அந்த வரைபடத்தை கடந்த 02.05.2019-ம் தேதி உதவி ஆணையர் தெற்கு மண்டலம் அவர்களிடம் ஒப்படைத்தேன். அதன்பின்பு 03.05.2019-ம் தேதி அன்று காலை சுமார் 10.30 மணியளவில் ATPO திரு.சரவணன் அவர்களை கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்தில் உள்ள அவருடைய அலுவலகத்தில் சந்தித்து ஆவணம் ஒப்படைப்பு செய்ததற்கான கடிதம் LPA அலுவலகத்திற்கு வழங்க வேண்டி கேட்டதற்கு அவர் சைட்டிற்கு வந்து ஆய்வு செய்த பின்பு உங்களுக்கு கடிதம் வழங்க ஏற்பாடு செய்கிறேன் என்று கூறினார். அதன்பின்பு ATPO திரு.சரவணன் அவர்கள் அவரின் Assistant திரு.ஆனந்தகுமாருடன் 14.05.2019-ம் தேதி மதியம் சுமார் 01.30 மணிக்கு சைட்டிற்கு வந்து பார்த்து வரைபடத்திற்கும் போடப்பட்டுள்ள தார் சாலைக்கும் அளவு சரியாக உள்ளதா என்று சர்வேயர் மூலம் சரிபார்க்க வேண்டும் என்று கூறி சென்றுவிட்டார். அப்போது என் அலுவலகத்தில் பணிபுரியும் திரு.பொன்ராஜ் அவர்களும் அருகில் இருந்தார். அதன்பின்பு 16.05.2019-ம் தேதி சர்வேயர் திரு.மனோஜ் மற்றும் அசிஸ்டெண்ட் திரு.ஆனந்தகுமார் ஆகியோர் மாலை சுமார் 04.30 மணிக்கு மேற்படி சைட்டிற்கு வந்து அளந்து சென்றார்கள். அதன்பின்பு என்னுடைய இன்ஜினியர் திரு.பொன்ராஜ் அவர்கள் ATPO திரு.சரவணன் அவர்களை சந்தித்து சர்வேயர் அளந்து சென்ற விவரத்தையும் வரைபடத்தில் உள்ள அளவுகள் சரியாக உள்ள விவரத்தையும் தெரிவித்தார். அதற்கு ATPO திரு.சரவணன் அவர்கள் தான் மீண்டும் நேரில் வந்து இடத்தை ஆய்வு செய்வதாக கூறியுள்ளார். அதன்பின்பு ATPO திரு.சரவணன் அவர்கள் 20.05.2019-ம் தேதி சைட்டிற்கு அசிஸ்டெண்ட் ஆனந்தகுமாருடன் நேரில் வந்து பார்த்துவிட்டு அனைத்தும் சரியாக உள்ளது என்று சொல்லி எங்களை 21.05.2019-ம் தேதி

அலுவலகத்தில் வந்து பார்க்க சொல்லி சென்று விட்டார். அதன்படி நாங்கள் 21.05.2019-ம் தேதி அவரது அலுவலகம் சென்ற போது அவர் அலுவலகத்தில் இல்லை. எனவே ATPO திரு.சரவணன் அவர்களை போனில் தொடர்பு கொண்டேன். அப்போது அவர் அவருடைய உதவியாளர் ஆனந்தகுமாரிடம் விவரங்கள் சொல்லியிருப்பதாகவும் அவரை சென்று பார்க்க சொன்னார். எனக்கு சொந்த வேலை இருந்ததால் என் அலுவலகத்தில் பணிபுரியும் திரு.பொன்ராஜ் அவர்களை ஆனந்தகுமாரை பார்க்க சொன்னேன். அதன்படி பொன்ராஜ் அவர்களும் 23.05.2019-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு ஆனந்தகுமாரை டவுன்ஹாலில் மாநகராட்சி அலுவலகத்தில் சென்று சந்தித்து ஒப்படைப்பு செய்ததற்கான கடிதத்தை கேட்டுள்ளார். அப்போது திரு.ஆனந்தகுமார் ரூ.6,00,000/- ATPO திரு.சரவணனுக்கு கொடுக்க வேண்டும் என்றும் TPO க்கு ரூ.50,000/-ம் கொடுக்க வேண்டும் என்று கூறினார். திரு.ஆனந்தகுமார் பணம் கேட்ட விவரத்தை பொன்ராஜ் என்னிடம் கூறினார். நான் 24.05.2019-ம் தேதி மதியம் சுமார் 01.00 மணியளவில் ATPO திரு.சரவணன் அவர்களிடம் எனது தொலைபேசி எண்.9443756607-ல் இருந்து பேசினேன். அப்போது அவர் என்னிடம் ஒப்படைப்பு செய்ததற்கான கடிதம் வழங்க ஏற்பாடு செய்ய என்னிடம் ரூ.6,00,000/-பணம் கேட்டார். நான் தற்போது பிசினஸ் மிகவும் டல்லாக உள்ளது என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று சொன்னதற்கு சரி ரூ.5,00,000/- போட்டு பார்ட் பேமெண்ட் ஆக தற்போது ரூ.2,50,000/-ம் இறுதி அப்ருவல் வந்த பிறகு ரூ.2,50,000/-கொடுங்கள் என்று கூறினார். நானும் சரி என்று போனை வைத்து விட்டேன். பின்பு 27.05.2019-ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில் ATPO திரு.சரவணன் அவர்கள் போன் நம்பர் 9443799239 மூலம் என்னை கூப்பிட்டு பணம் ரெடி செய்து விட்டீர்களா என்று கேட்டார். நான் இன்னும் ரெடி செய்ய வில்லை என்று கூறியதற்கு சரி நான் அப்புறம் கூப்பிடுகிறேன் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். மீண்டும் என்னை மதியம் சுமார் 12.40 மணிக்கு என்னை கூப்பிட்டார் அப்போதும் நான் அவரிடம் பணம் ஏற்பாடு செய்யவில்லை என்று கூறினேன. பின்னர் மீண்டும் என்னை மாலை சுமார் 03.45 மணிக்கு என்னை கூப்பிட்டு பணம் என்னாச்சு என்று கேட்டார், அதற்கு நான் என்னால் இன்று முடியாது என்றும் செக் லேட்டாக போட்டுவிட்டார்கள் என்றும், பணம் கிடைக்க கஷ்டம் என்று சொன்னதற்கு, அவர் நாளை (28.05.2019) நான் லீவில் செல்கிறேன் என்றும் அஸிஸ்டென்ட் ஆனந்தகுமாரிடம் பணம் கொடுத்துவிடுங்கள் என்று கூறினார். நானும் சரி என்று கூறி போனை வைத்துவிட்டேன். பின்பு 28.05.2019-ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் ஆனந்தகுமார் அவருடைய போன் நம்பர்

9790641798-ல் இருந்து என்னை கூப்பிட்டு தன்னை சரவணன் சாரின் அசிஸ்டென்ட் என்று அறிமுகப்படுத்தி கொண்டு சரவணன் சார் கேட்ட பணம் ரெடியாகி விட்டதா என்று கேட்டார். நான் அவரிடம் சரவணன் சார் உங்களிடம் எவ்வளவு பணம் வாங்க சொல்லியுள்ளார் என்று கேட்டேன். அதற்கு அவர் உங்களிடம் சொல்லவில்லையா என்று கேட்டார். நான் அவரிடம் பாதியை தரச்சொல்லியுள்ளார். உங்களிடம் எவ்வளவு வாங்க சொல்லியுள்ளார் என்று தெரிந்து கொள்வதற்காக கேட்டேன். அதற்கு அவர் சாரிடம் கேட்டு சொல்கிறேன் என்று சொல்லி விட்டு போனை வைத்தார். பின்னர் சிறிது நேரத்தில் என்னை மீண்டும் செல்போனில் அழைத்து ரூ.2.5 லட்சம் வாங்க சொல்லி சார் சொன்னார் என்று தெரிவித்தார். மேற்படி எனக்கும் அவருக்கும் நடந்த உரையாடலை எனது செல்போனில் பதிவு செய்தேன். நான் அவரிடம் பணம் ரெடி செய்து விட்டு கூப்பிடுகிறேன் என்று சொல்லி போனை வைத்துவிட்டேன். மீண்டும் அன்றைய தினமே என்னை போனில் அழைத்து பணம் கேட்டார். நானும் பணத்தை ரெடி செய்து விட்டு கூப்பிடுகிறேன் என்று சொல்லி போனை வைத்து விட்டேன். பின்னர் இன்று 29.05.2019-ம் தேதி காலை சுமார் 9.10 மணியளவில் 9443799239 என்ற எண்ணிலிருந்து ATPO திரு.சரவணன் அவர்கள் என்னை அழைத்து உங்களுக்கு எத்தனை உதவி செய்திருக்கிறேன் என்றும், ஏன் பணம் இது வரை ஆனந்தகுமாரிடம் கொடுக்கவில்லை என்று கோபமாக என்னிடம் கேட்டு நான் ரூ.6 லட்சம் கேட்தற்கு நீங்கள் கேட்டதால் தான் ரூ.1 லட்சம் குறைத்து ரூ.5 லட்சத்திற்கு இந்த வேலையை முடித்து தருவதற்கு ஒத்துக் கொண்டேன். நீங்கள் நான் மீண்டும் குறைப்பேன் என்று Prolong பண்ணிட்டு போக வேண்டாம் பிரச்சனை ஆகும். சீக்கிரம் பணத்தை கொடுங்கள் உடனே வேலையை முடித்து தருகிறேன் என்றும் அவரது அசிஸ்டெண்ட் ஆனந்தகுமாரிடம் பணத்தை கொடுத்து விட்டு என்னை வந்து நேரில் பாருங்கள் என்று சொன்னார். நான் எனக்கும் அவருக்கும் இடையே நடந்த இந்த உரையாடலை எனது செல்போனில் பதிவு செய்து வைத்துள்ளேன். மேலும் ஆனந்தகுமார் என்பவர் ATPO திரு.சரவணன் அவர்களுக்கு எடுபிடி வேலை செய்து கொடுக்கும் தனிநபர் ஆவார். பின்னர் நான் யோசித்து பார்த்ததில் திருமதி.சுகுணா பெயரில் மேற்படி இடத்திற்கு அபிவிருத்தி வேலைகள் முடிக்கப்பட்டதற்கான கடிதம் வழங்க ஏற்பாடு செய்யவதற்காக லஞ்சமாக முன் பணம் ரூ.2,50,000/-ஐ தெற்கு மண்டல அலுவலக ATPO திரு.சரவணன் அவர்களுக்கு திரு.ஆனந்தகுமார் மூலமாக லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் திருமதி.சுகுணா பெயரில் உள்ள இடத்திற்கு அபிவிருத்தி வேலைகள் செய்து முடிக்கப்பட்டதற்கான கடிதம் வழங்க லஞ்சம் கேட்கும் ATPO திரு.சரவணன் மீதும்

அவருக்கு லஞ்சப்பணத்தை பெற்று கொடுக்க உடந்தையாக இருக்கும் திரு.ஆனந்தகுமார் என்பவர் மீதும் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு sd/- (XXXX) (B.சோமசுந்தரம்) 29.05.2019. Madam, Received the complaint on 29.05.2019 at about 13.30 hrs and after conducting Discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.12/2019/AC/CB u/s 7(a) & 7A of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 was registered on 29.05.2019 at about 14.30 hrs and took up investigation. Sd/-(XXXX) 29.05.2019 Inspector/V &AC/Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன.

29.5.2019

(ம.விஜயலட்சுமி)
காவல்ஆய்வாளர்,
ஊழல் தடுப்புமற்றும் கண்காணிப்புபிரிவு,
கோயம்புத்தூர்.

Encl.

One C.D containing 3 audio files (2 audio files containing the conversation between A2 Aravindkumar and the complainant on 28.5.2019 and another Audio file containing the conversation between A1 Saravanan and complainant on 29.5.2019.

29.5.2019